**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**P201 மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட இலக்கியம் எது?
2. மொழிபெயர்ப்புக் கொள்கைகள் என்ற நூலை எழுதியவர் யார்?
3. ந. பிச்சமூர்த்தியின் சீனத்து மகளிர் கதைகள் பற்றிய சிறுகதைத் தொகுப்பின் பெயர் யாது?
4. மொழிபெயர்ப்பின் தனிச்சிறப்பு யாது?
5. தமிழ் வளர்க்கும் முறையில் கலப்பைக் கொள்வது சிறப்பு என்பது யார் கூற்று?
6. மொழிபெயர்ப்பின் இரு களங்கள் எவை?
7. பாரதியார் தம் கட்டுரையில் மொழிபெயர்த்துள்ள குறும்பாட்டின் ஆசிரியர் யார்?
8. ஹெமிங்வேயின் நோபல் பரிசு பெற்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் எது?
9. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்று கூறியவர் யார்?
10. மாற்றம் என்றால் என்ன?
11. நிகண்டின் அடிப்படைத் தன்மை யாது?
12. தானியங்களை அளக்கப் பயன்படுத்தும் கலம் எவ்வாறு குறிக்கப்படுகிறது?
13. ஆட்சி மொழி என்றால் என்ன?
14. தமிழின் முதல் அறிவியல் நூல் எது?
15. 'அல்லி அரசாணி மாலை' நாட்டுப்புறக் கதை எந்நூலை மூலமாகக் கொண்டது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பாளனுக்குத் தேவைப்படும் தகுதிகள் யாவை?
2. மரபுவழி மொழிபெயர்ப்பு – சிறு குறிப்பு வரைக.
3. தன்வயமாக்கல் என்றால் என்ன?
4. மருத்துவ இதழ்கள் குறித்து எழுதுக.
5. சொல்லின் தன்மையை மொழியியலாளர்கள் எவ்வாறு வரையறை செய்கின்றனர்?
6. மங்கல வழக்கு, இடக்கரடக்கல் – குறிப்பு வரைக.
7. அகராதியின் பயன்களைக் குறிப்பிடுக.
8. சொற்பொருள் மாற்றத்திற்கான காரணங்கள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின் பயன்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கலைச்சொல்லாக்கம் குறித்து விளக்கி எழுதுக.

2. (அ) இதழியல் துறை மொழிபெயர்ப்புச் சிக்கல்களைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சொல்லாக்கம் – சொல்லாக்கத்தின் நோக்கம் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) தமிழில் அகராதியின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திரைப்படங்களுக்கும் மொழிகளுக்கும் இடையிலான உறவினைக் குறித்து விளக்குக.

*** 